கலைஞர் 100 1924 - 2023

**கிருஷ்ணகிரி மண்டல கூட்டுறவுச் சங்கங்களின் துணைப்பதிவாளர் அவர்களின்**

**செயல்முறை ஆணை**

முன்னிலை: திரு.ப.பாலமுருகன்,
கூட்டுறவுச் சங்கங்களின் துணைப்பதிவாளர்,
துணைப்பதிவாளர் அலுவலகம்,
கிருஷ்ணகிரி.

ந.க.எண்.3916/2023/ப.தொ. நாள்: 08.05.2024

சோபகிருது வருடம்/ வைகாசி 07 / திருவள்ளுவர் ஆண்டு 2054

பொருள்: பணியமைப்பு – கருணை அடிப்படையில் பணி நியமனம் – கூட்டுறவுத்துறையில் பணியில் இருக்கும் போது மறைந்த அரசு பணியாளரின் வாரிசுதாரருக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் – திரு.ப.ஆறுமுகம் என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணி நியமனம் வழங்கப்பட்டது – பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் – தொடர்பாக.

பார்வை:

1. அரசாணை (நிலை) எண்.33, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு(Q1)த்துறை, நாள்.08.03.2023.
2. கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் அவர்களின் கடிதம் ந.க.எண்.47338/2023/பதொ4(6), நாள்: 16.11.2023.
3. கூட்டுறவுச் சங்கங்களின் இணைப்பதிவாளர், கிருஷ்ணகிரி அவர்களின் ந.க.எண்.5678/2023/ப.தொ, நாள்: 07.12.2023.
4. சரக துணைப்பதிவாளர், கிருஷ்ணகிரி அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.3916/2023/ப.தொ, நாள்: 31.01.2024.
5. கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் அவர்களின் கடிதம் ந.க.எண்.47338/2023/பதொ4, நாள்: 10.02.2024.
6. கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் அவர்களின் கடிதம் ந.க.எண்.47338/2023/பதொ4, நாள்: 22.04.2024.
7. கூட்டுறவுச் சங்கங்களின் இணைப்பதிவாளர், கிருஷ்ணகிரி அவர்களின் ந.க.எண்.5678/2023/ப.தொ, நாள்: 08.05.2024.

ஃஃஃஃஃ

Scanned with OKEN Scanner

<u>ஆணை :</u>

பார்வை 1-ல் காணும் அரசாணையின் வழிமுறைகள் படி தருமபுரி மண்டல இணைப்பதிவாளர் அலுவலகத்தில் அலுவலக உதவியாளராக பணிபுரிந்து பணியிடை இயற்கை எய்திய திரு.பொ.பழனி அவர்களது மகன் திரு.ப.ஆறுமுகம் என்பவருக்கு கருணை அடிப்படையில் அரசுப் பணி வழங்க பார்வை 2-ல் காணும் பதிவாளர் அவர்களின் அனுமதி ஆணையின்படி பார்வை 3-ல் காணும் இணைப்பதிவாளர், கிருஷ்ணகிரி அவர்களின் கடிதத்தின் மூலம் கிருஷ்ணகிரி சரக துணைப்பதிவாளர் அலுவலகத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதைத் தொடர்ந்து பார்வை 4-ல் காணும் கிருஷ்ணகிரி சரக துணைப்பதிவாளர் அவர்களின் செயல்முறை ஆணைப்படி கிருஷ்ணகிரி சரக துணைப்பதிவாளர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளர் பணியிடத்தில் பணிநியமனம் செய்யப்பட்ட திரு.ப.ஆறுமுகம், இளநிலை உதவியாளர் பார்வை 5 மற்றும் 6-ல் வழங்கப்பட்ட அறிவுரைகளுக்குட்பட்டு பணியில் சேர்ந்த நாள் முதல் தமிழ்நாடு குடிமைப்பணி (கருணை அடிப்படை நியமனம்) விதிகள், 2023-ல் கருணை அடிப்படை நியமனம் தொடர்பான திருந்திய ஒருங்கிணைந்த நெறிமுறைகள் விதி எண்.16-ன் படி கீழ்க்கண்டவாறு பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

| வ. எண் | கருணை அடிப்படையிலான பணி நியமன வரிசை எண் | பெயர் மற்றும் பதவி | பிறந்த தேதி | முதன் முதலாக பணியில் சேர்ந்த நாள் | பணிவரன்முறை செய்யப்பட வேண்டிய நாள் |
|---|---|---|---|---|---|
| 1. | 4 | திரு.ப.ஆறுமுகம்,<br>இளநிலை உதவியாளர் | 23.05.1984 | 05.02.2024<br>மு.ப. | 05.02.2024<br>மு.ப. |

தனியரை பணிவரன்முறை செய்த நாள் முதல் தகுதிகாண் பருவத்தில் வைத்து மூன்றாண்டுகள் தொடர்ச்சியான பணிக்காலத்தில், இரண்டாண்டு பணிக்காலத்தினை முடிக்க அறிவுறுத்தப்படுகிறது.

Scanned with OKEN Scanner

மேற்கண்ட பணியாளர் தகுதிகாண் பருவம் முடித்த பிறகே இரண்டாவது மற்றும் தொடர் ஊதிய உயர்வுகள் பெற தகுதியுடையவராகிறார் எனவும் இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

துணைப்பதிவாளர்,
கிருஷ்ணகிரி

**பெறுநர்:**

திரு.ப.ஆறுமுகம்,
துணைப்பதிவாளர் அலுவலகம்,
கிருஷ்ணகிரி.

**நகல்:**

1. கூட்டுறவுச் சங்கங்களின் இணைப்பதிவாளர், கிருஷ்ணகிரி அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.
2. இருப்பு கோப்பு - 2024.

Scanned with OKEN Scanner